**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகார சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைபழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார

சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகார சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகார சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- அதிகார சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1. நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப்

பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 76 (இ) பந்தியின் பிரகாரம் முதிர்ச்சியடையும் காலம் 06 மாதங்களான ரூபா 4,579,895 ஆன நிலையான வைப்பொன்று நிதி நிலைமை கூற்றினுள் நடைமுறையல்லாச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்பொன்று ஆரம்பிப்பதன் நோக்கம் நீண்ட காலமாக பேணிச்செல்லப்பட்டு கூடிய வட்டி விகிதத்தினை பெறுதலென்பதினால் நடைமுறையல்லாச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக காணப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்படு வாழ்க்கை காலம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணத்தினால் கிரயம் ரூபா 34,164,697 ஆன நிலையான சொத்துக்கள் தேய்மானம் செய்யப்பட்டிருப்பினும் இன்னுமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள் மதிப்பிடுவதற்காக 2021 ஆம் ஆண்டில் குழுவொன்று நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவாக மீள்மதிப்பீடு நிறைவு செய்யப்படுவதற்கு குறிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக காணப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் முன்னாள் காணப்பட்ட பழைய எல்லை மதிலிற்கு பதிலாக மீளாய்வாண்டு வரையில் செலவிடப்பட்டிருந்த ரூபா 5,754,823 மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக மேலதிக செலவாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் பழைய எல்லை மதிலின் பெறுமதி அடையாளப்படுத்தப்பட்டு | வருடாந்த மீள்மதிப்பீட்டு தேவைப்பாடு பிரகாரம் கருத்திற் கொள்ளப்பட்டு மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த கூட்டுத்தொகை ரூபா 962,623 ஆன 3 கணக்குகளின் மீதிகள் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தீர்க்கப்படாத 03 கணக்கு மீதிகள் 2021 ஆம் ஆண்டில் பரீட்சித்து தேவையான விதத்தில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விரைவாக தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நடைமுறையல்லாச் சொத்தக்களின் கீழ் செயற்திட்ட பற்றாக்குறையாக கூட்டுத்தொகை ரூபா 602,509 ஆன 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாது நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் செயற்திட்ட மிகையாக கூட்டுத்தொகை ரூபா 3,358,669 ஆன 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாது நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2105 யூலை 14 திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ), 371(5) | (i) ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 ஆன உயர்ந்தபட்சம் வரை தற்காலிக இடைக்கால கட்டுநிதியொன்று பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியிருப்பினும், 04 சந்தர்ப்பங்களில் அவ் எல்லையினை விஞ்சி முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | மாவட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்கும் போது மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்கு பண ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) கட்டுநிதி வெளியிடப்பட்ட நிதி ஆண்டின் திசெம்பர் 31 இற்கு அதிகமாக தாமதமாக்காது தீர்க்கப்பட வேண்டியிருப்பினும், 2019 ஆம் ஆண்டில் 31 சந்தர்ப்பங்களில் வெளியிடப்பட்ட ரூபா 223,580 ஆன முற்பணமும், மீளாய்வாண்டினுள் வெளியிடப்பட்ட முற்பணத்தில் ரூபா 1,231,014 உம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களின் முற்பணம் தீர்க்கப்படும் போது பற்றுச்சீட்டு தபால் ஊடாக பிரதான அலுவலகத்திற்கு முன்வைக்கப்படும் என்பதனால் அங்கு ஏற்படுகின்ற தாமத்தினால் முற்பணம் தீர்ப்பதற்கு இயலாதுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (iii) குறித்த பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வாண்டினுள் 39 சந்தர்ப்பங்களில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,428,800 ஆன முற்பணம் தொடர்புடைய பணிக்காக பயன்படுத்தப்படாது 18 நாட்கள் தொடக்கம் 119 நாட்கள் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததன் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட கொவிட் நிலைமையினால் காணப்பட்ட தனிமைப்படுத்தல் சட்ட பிரமாணங்களின் காரணத்தினால் வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு திறன் கிடைக்காமையினால் மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) 2016 மார்ச் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அனைத்து நிதி ஆண்டுகளும் யூன் 15 திகதிக்கு முன்னர் முன்னைய ஆண்டின் பொருள் ஆய்வு அறிக்கை கணக்காய்வாரள் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் 2019 ஆண்டிற்கு தொடர்புடைய அறிக்கை 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி முன்வைக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் பொருள் ஆய்வு 2021 மே வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு முழுவதிலும் கொவிட் தொற்று காணப்பட்டதன் காரணத்தினால் அவ்வப்போது நாடு மூடப்பட்டதுடன், எனவே, பொருள் ஆய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு தாமதமாகியது. | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,968,095 ஆன பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,900,087 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 5,868,182 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு திறைச்சேரியிடமிருந்து பெற்றுக் கொடுக்கப்படுகின்ற அளிப்புக்கள் குறைவடைந்தமை பிரதான காரணமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் 1929 தொலைப்பேசி இலக்கத்திற்கு பெறப்படுகின்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக செயற்படுவதற்காக பொருத்தமான பொறிமுறையொன்று தயாரித்தல் மற்றும் தொடர்புடைய முறைமை மேம்படுத்துவதற்காக பரிந்துரை பெறப்படுவதற்காக ஒரு ஆலோசகருக்கு 2016/2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 900,000 உம் கணினி முறைமையொன்று தாயரிப்பதற்காக அரச நிறுவனமொன்றிற்று ரூபா 1,200,000 உம் செலுத்தப்பட்டிருந்தது. ஆலோசகரின் அறிக்கை பெற்றுக்கொடுக்கப்பட்டு 3 ஆண்டுகள் கடந்திருப்பினும், அதில் உள்ளடக்கப்பட்டிருந்த பரிந்துரை மற்றும் முறைமை பின்பற்றப்படல் குறித்து முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிராததுடன், தரவு முறைமையும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1929 மென்பொருளுடன் இந்த தரவு முறைமை இணங்காது. | ஆலோசனை அறிக்கை ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரை செயற்படுத்தப்பட்டு தரவு முறைமை குறித்து விரைவான கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.2 குறை பயன்பாட்டுடைய நிதியம்

-------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிறுவர் துஸ்பிரயோகம் தவிர்த்தல் பணிக்காக மற்றும் அவ்வாறான துஸ்பிரயோகங்களினால் பாதிப்படைகிறவர்களுக்கு பாதுகாப்பளித்தல், அவர்களின் உரிமைகளை காத்தல் மற்றும் எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்காக 2010 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நிறுவப்பட்டதுடன், 2021 மார்ச் 29 ஆன கணக்காய்வு திகதி வரையில் இந்த நிதியத்தில் ரூபா 2,378,477 ஆன மீதி காணப்படினும் 2018 ஆம் ஆண்டிலிருந்து நிதியத்தின் நோக்கங்கள் நிறைவேற்றுவதற்காக எந்தவொரு பணமும் செலவிடப்பட்டிருக்கவில்லை. | இந் நிதியத்தின் மீதி பரீட்சித்து பார்க்கப்பட்டு குறித்த வண்ணம் செலவிடப்பட வேண்டுமென்பதினால் பரீட்சித்து பார்த்து நிதிஏற்பாடு வெளியிடப்படுவதற்கு குறிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் நோக்கங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

----------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 ஆம் ஆண்டின் ரூபா 18,317,757 ஆன பெறுமதிக்கு குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணி 2021 ஆகஸ்ட் 31 திகதி வரையிலும் விளைவற்றதாக காணப்பட்டது. | திறைச்சேரி நிதியேற்பாட்டினை திட்டமிட்டு கோரப்படினும் நிதியேற்பாடு பெறப்படாமையின் காரணத்தினால் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு இயாதிருந்தது. | வளங்கள் உயர்ந்தபட்ச வினைத்திறனுடன் பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 பெறுகை மகாமைத்துவம்

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கொவிட் 19 தொற்றினுள் பிள்ளைக்கு ஏற்படுகின்ற உடல் ரீதியான மற்றும் மன ரீதியான பாதிப்பு மற்றும் சமூக பொறுப்பு எவ்வாறு விளக்கமளிக்கப்படுகின்றது என்பதனை அடிப்படையாகக் கொண்டு ஓரங்க நாடகமொன்று தயாரிப்பதற்காக அவசர பெறுகை முறை பின்பற்றப்பட்டு ரூபா 250,000 லெவிடப்பட்டிருப்பினும், கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 30 திகதி வரையிலும் இந்த நாடகம் ஒளிப்பரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செயற்பாடுகளின் கீழ் காணப்படுகின்ற நிதியேற்பாட்டின் கீழ் காணப்படுகின்ற நிதியேற்பாடு அடிப்படையில் இந்த பணி மேற்கொள்ளப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் நிதியேற்பாடு பெறப்பட்டவுடனே இந்த நாடகம் ஒளிப்பரப்புவதற்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகப்பூர்வ வலைய தளத்தின் ஊடாகவும், யூ டியுப் செனல் ஊடாகவும் விழிப்புணர்வு கருவியாக இது ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அவசர தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளும் பணிகள் வினைத்திறனாக மற்றும் பயனுறுதிமிக்கதாக அக் காலத்தினுள் தொடர்புடைய சட்டத் திட்டங்களுக்கு அமைவாக நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அதிகார சபையினால் 2019 ஆம் ஆண்டினுள் 03 தலைப்புக்களின் கீழ் 8,500 கைப்புத்தகங்கள் அச்சிடுவதற்காக ரூபா 4,056,501 செலவிடப்பட்டிருப்பினும் அதில் கிரயம் ரூபா 3,245,200 ஆன 6,800 புத்தகங்கள் கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 08 வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் அக் கைப்புத்தகங்கள் பகிர்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் அவ் அச்சுக்கள் அனைத்தும் பகிர்ந்து நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | தேவை அடையாளப்படுத்தப்பட்டு வளங்கள் வினைத்திறனாக மற்றும் பயனுறுதிமிக்கதாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3.5 ஏனைய அமைப்புக்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் உதவி பணிப்பாளர் (நிகழ்ச்சித்திட்டம்) பதவி வகித்த உத்தியோகத்தர் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து சம்பளம் மற்றும் கொடுப்பனவு திருப்பி செலுத்தல் அடிப்படையில் அமைச்சின் பதவியணியினரில் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அப் பதவிக்காக வேறு உத்தியோகத்தரொருவரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதற்கு குறிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் நீண்ட காலத்திற்கு வேறு அமைப்புக்களுக்கு விடுவிக்கப்படும் போது அதிகார சபையின் செயலாற்றலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 548 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாரான பதவியணியினர் 344 ஆனதினால் 204 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டது. | ஆட்சேர்ப்பு செய்வதற்கான மேல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அதிகார சபையின் நோக்கம் நிறைவேற்றிக் கொள்வதற்காக மனிதவள முகாமைத்துவம் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்வதற்காக மற்றும் கடமையிலுள்ள உத்தியோகத்தர்கள் அவ்வவ் பதவிகளில் நிறுத்தி வைப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தல், சம்பள நிலைகள் திருத்தல், சேவை நிரந்தரமாக்கல் போன்ற பணிகள் நீண்ட காலமாக மேற் கொள்ளப்பட்டிராமையினால் அதிகார சபையின் ஊழிய விற்றுமுதல் உயர் மட்டத்தில் காணப்பட்டமை கணக்காய்வின் | நிரந்தரமாக்குவதற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு காணப்படுகின்றமை மற்றும் சம்பள நிலைகள் தொடர்பான பிரச்சனைகள் தீர்க்கப்படுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் தேவையான தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அதிகார சபையின் நோக்கங்கள் நிறைவேற்றிக் கொள்வதற்காக மனிதவள முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

போது அவதானிக்கப்பட்டது. அது அதிகார சபையின் நோக்கங்களினனை அடைவதில் தாமதத்திற்கு தாக்கமளித்திருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பினும், 2016 ஆம் ஆண்டிலிருந்து தொடர்புடைய வருடாந்த அறிக்கை 2021 மார்ச் 19 ஆன கணக்காய்வு திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016, 2017 அமைச்சரவைக்கும், 2018 அச்சிற்கும் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் 2019 மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. 2020 இறுதி வரைவு நிறைவு செய்யப்பட்டுள்ளதென. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடகப்பட்டுள்ள 15 செயற்பாடுகளுக்காக 420 பயிற்சி மற்றும் வேலைத்திட்டங்களுக்காக ரூபா 8,140,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருப்பினும், அதில் ரூபா 845,000 மட்டும் செலவிடப்பட்டு 12 வேலைத்திட்டங்கள் மட்டும் நடத்தப்பட்டிருந்தது. | கொவிட் நிலைமையினால் 19 வேலைத்திட்டங்கள் நடத்துவதற்கு இயலவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்தின் அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (அ) அதிகார சபை நிறுவப்பட்டு 20 ஆண்டுகள் கடந்த பின்னர் 2019 ஒக்தோம்பர் 29 ஆம் திகதி அங்கீகாரம் பெறப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கை 2021 மார்ச் 29 ஆன கணக்காய்வு திகதி வரையிலும் செயற்படுத்தப்படாமையின் காரணத்தினால் தேசிய கொள்கை பயனுறுதிமிக்கதாக செயற்படுத்தப்படுவதற்கு தேவையான சட்ட ரீதியான, | சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கை 5 ஆண்டுகள் செயல் நடவடிக்கை திட்டம் 2021-2025 நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 10 விடய பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் தொடர்புடைய நிறுவனங்கள் தொடர்புகொள்ளல் இலகுவான விடயமாகாதமையினால் மற்றும் சிறுவர் பாதுகாப்பு | சிறுவர் பாதுகாப்பு கொள்கை செயற்படுத்தப்படுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிர்வாக ரீதியான அல்லது வேறு திருத்தங்கள் பரிந்துரை செய்யும் பணிகள் உள்ளடங்கலாக அதற்கு துணை பணிகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | குழு ஆரம்பிப்பதற்கு அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (இ) 2011 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை அதிகார சபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ள 89,405 குற்றச்சாட்டுகளில் தீர்க்கப்படாது முன் கொண்டு வரப்பட்டிருந்த குற்றச்சாட்டு எண்ணிக்கை 40,668 ஆக காணப்பட்டதுடன் இந்த குற்றச்சாட்டுகள் விரைவாக தீர்க்கப்படுவதற்கு வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து குற்றச்சாட்டுகள் விரைவாக தீர்க்கப்படுவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | 2011 ஆம் ஆண்டிலிருந்து தீர்க்கப்படாதுள்ள குற்றச்சாட்டுகள் தீர்க்கப்படுவதற்கு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) அதிகாரச் சபை நிறுவப்பட்டு 21 ஆண்டுகள் கடந்திருப்பினும் சட்டத்தின் பிரகாரம் தேசிய தரவு தளமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு இறுதியில் தரவு தளமொன்று தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேசிய தரவுதளம் விரைவாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 4.3 உள்ளக கணக்காய்வு

---------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இன் டீஎம்ஏ/2009/(1) இன் 3 பந்தியின் பிரகாரம் நிறைவேற்றப்படுவதற்கு போதுமான பதவியணியினர் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு இணைக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையில் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்கள் காரணத்தினால் உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக உத்தியோகத்தரொருவர் இணைப்பதற்கு இயலாதுள்ளமை. | போதுமான பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு உள்ளக கணக்காய்வினை வலுப்படுத்தப்படல் வேண்டும். |